**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
**SC.No.66/2025 – PW- 5**

| | |
|---|---|
| Name | திரு. சுரேஷ் |
| Husband/Father Name | சுப்பிரமணியன் |
| Village /Area | நெல்வாய் |
| Taluk | நெமிலி |
| Occupation | விவசாயம் |
| Age | 40 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 13.11.2025.

**(எதிரிகள் ஆஜர்.).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த தமிழரசன் என்னுடைய அக்கா மகன் ஆவார். கடந்த 16.01.2025 அன்று மாலை 05.15 முதல் 05.30 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது ஊர் மக்கள் வந்து என்னுடைய மைத்துனர் எரிந்துக்கொண்டிருப்பதாக தகவல் சொன்னார்கள். ஊர் மக்கள் அனைவரும் சம்பவ இடத்திற்கு சென்றார்கள் நானும் சென்றேன். என்ன நடந்தது என்று தமிழரசனை கேட்டதற்கு நான் எதுவும் தவறு செய்யவில்லை என்றும் பிரேம்குமார் என்பவர் என் மீது பெட்ரோல் ஊற்றி கொளுத்தினார் என்று கூறினார்.

சம்பவத்தின் போது விஜயகணபதிக்கும் தீக்காயம் இருந்தது அவரையும் என்னுடைய மைத்துனர் தமிழரசனையும் 108 ஆம்புலன்சின் மூலமாக காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பிறகு அங்கு சிகிச்சை பெற்று மேல்

சிகிச்சைக்காக சென்னை, கே.எம்.சி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். தீக்காயம் பட்ட தமிழரசனும், விஜயகணபதியும் சிகிச்சையில் இருந்தனர். பிறகு 6 நாட்கள் கழித்து தமிழரசன் இறந்துவிட்டார். இது சம்பந்தமாக போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சம்பவ இடத்திற்கும் என் வீட்டிற்கும் இடைப்பட்ட தொலைவு அரை கி.மீ அல்லது 500 மீட்டர் இருக்கும். சம்பவம் பற்றி எனக்கு ஊர் மக்கள் தான் கூறினார்கள். நான் சம்பவ இடத்திற்கு பைக்கில் சென்றேன். போலீஸ் விசாரணையில் நான் தமிழரசனை பிரேம்குமார் தான் பெட்ரோல் ஊற்றி கொளுத்தினான் என்று கூறினேன். சம்பவம் நடந்து எவ்வளவு நேரத்தில் ஆம்புலன்ஸ் வந்தது என்றால் ஊர்காரர்கள் தான் ஆம்புலன்சிற்கு போன் செய்தார்கள். ஆம்புலன்சில் நானும் தமிழரசனும், விஜயகணபதியும், தமிழரசனின் பாட்டியும் சென்றோம்.

காஞ்சிபுரம் மருத்துவமனையில் தமிழரசனுக்கு காயம் எவ்வாறு எற்பட்டது என்று மருத்துவர் கேட்டார் அதற்கு பதிலை நான் தான் கூறினேன். அந்த மருத்துவமனையில் தமிழரசன் பேசும் நிலையில் இருந்தாரா என்றால் இல்லை. மருத்தவரிடம் நான் தமிழரசனை யார் தீயிட்டு கொளுத்தினார் என்ற விவரத்தையும் கூறினேன். பிறகு மேல்சிகிச்சைக்காக சென்னை கே.எம்.சி.க்கு நான் காயம் பட்ட நபர்களுடன் சென்றேனா என்றால் ஆமாம். சென்னையில் நான் தமிழரசனுடன் 16 மற்றும் 17 ம் தேதி வரை உடன் இருந்தேன்.

கே.எம்.சி மருத்துவமனையில் 16 மற்றும் 17 –ம் தேதிகளில் தமிழரசன் பேசும் நிலையில் இல்லாததால் என்னிடம் சம்பவம் குறித்து தகவல் கூறவில்லை மூன்று தினங்கள் கழித்து அவருக்கு நினைவு

வந்த பிறகு என்னிடம் தகவல் சொன்னார். சென்னை மருத்துவமனையில் நானும், தமிழரசன் பாட்டியும் தான் தமிழரசனை பார்த்து கொண்டோம் என்று சொன்னால் சரிதான். அப்போது வேறு யாரேனும் தமிழரசனை பார்க்க வந்தார்களா என்றால் ஒவ்வொருத்தராக செல்ல வேண்டும் என்று கூறினார்கள். வேறு யாரும் வரவில்லை.

போலீசார் என்னை கே.எம்.சி. மருத்துவமனையில் சம்பவ மறுதினம் 17–ம் தேதி மாலை சுமார் 05.00 மணிக்கு விசாரித்தார்கள். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், சம்பவத்தை பற்றி யார் எனக்கு தகவல் கூறினார்கள் என்று எனக்கு தெரியாது என்றும், இறந்து போன தமிழரசன் எனது உறவினர் என்பதால் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பிரேம்குமார் தான் தமிழரசனை தீயிட்டு கொளுத்தியதாக ஆம்புலன்சில் ஏற்றும் போது கூறினார்.

**<u>2 முதல் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ஆம்புலன்ஸ் நெமிலி பக்கம் இருந்து தான் வந்தது. அந்த ஆம்புலன்ஸ் அரக்கோணம் மருத்துவமனையில் இருந்து வந்ததா அல்லது காஞ்சிபுரம் மருத்துவமனையில் இருந்து வந்ததா என்று எனக்கு தெரியாது. சம்பவ இடத்திற்கு என்னுடன் அக்கா, மாமா, மச்சான் மற்றும் ஊர் மக்கள் அனைவரும் வந்துவிட்டார்கள். அந்த நேரத்தில் போலீசார் இருந்தார்களா என்றால் நான் கவனிக்கவில்லை ஆம்புலன்ஸ் வந்த உடன் ஆம்புலன்ஸ் உடன் சென்றுவிட்டேன்.

வீட்டில் இருந்து சம்பவ இடம் செல்லும் போது மாலை 05.15 – 05.30 மணியிருக்கும். நாங்கள் சென்று 15 நிமிடம் கழித்து ஆம்புலன்ஸ் வந்தது. ஆம்புலன்ஸில் நானாக தான் விருப்பட்டு எனது அக்கா மகன் தமிழரசன் என்பதால் உடன் ஏறிச்சென்றேன்.

காஞ்சிபுரம் அரசு மருத்துவனையில் நான் மருத்துவரிடம் கூறும் போது விஜயகணபதியின் மாமா, அக்கா ஆகியோர்கள் இருந்தார்கள். ஆம்புலன்ஸில் நோயாளியை ஏற்றிச்செல்ல ஒரே ஒரு ஸ்ட்ரெச்சர் இருந்தது அதில் தமிழரசனை படுக்க வைத்துவிட்டார்கள் விஜயகணபதியை உட்கார வைத்துவிட்டார்கள்.

விஜயகணபதியை அவருடைய அக்காவும், மாமாவும் சேர்த்தார்கள். போலீசாரிடம் தமிழரசன் பேச இயலாத நிலையில் இருந்ததால் புகார் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. காஞ்சிபுரம் மருத்துவமனையில் இருந்து கே.எம்.சி மருத்துவமனைக்கு இரவு 10 மணிக்கு மேல் போய் சேர்ந்தோம். தமிழரசனும் விஜயகணபதியும் ஒன்றாக சேர்ந்து தான் கே.எம்.சி மருத்துவமனைக்கு ஒரே ஆம்பிலன்சில் சென்றோம். சம்பவ இடத்தில் இருந்து காஞ்சிபுரம் மருத்துவமனையில் இருந்து தமிழரசனும் விஜயகணபதியும் ஒரே ஆம்புலன்சில் சென்றார்கள்.

பிறகு சாட்சி காஞ்சிபுரத்தில் இருந்து சென்னை கே.எம்.சி மருத்துவமனைக்கு தமிழரசனை தனியாக ஒரு ஆம்புலன்சில் நானும், தமிழரசனின் பாட்டியும் உடன் சென்றோம். விஜயகணபதியை வேறொரு ஆம்புலன்சில் அவருடைய அக்காவும், மாமாவும் சிகிச்சைக்காக அழைத்து வந்தார்கள். ஒன்றன் பின் ஒன்றாக தான் நாங்கள் ஆம்புலன்சில் சென்னை மருத்துவமனைக்கு சென்றோம் என்று சொன்னால் சரிதான். இரண்டு ஆம்புலன்சும் இரவு 10 மணிக்கு சென்னைக்கு சென்று சேர்ந்தது என்று சொன்னால் நான் நேரம் பார்க்கவில்லை அப்போது இரவு 10 – 11 மணியிருக்கும்.

இருவரையும் பக்கத்து பக்கத்து படுக்கையில் அனுமதித்து சிகிச்சை கொடுத்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. தீக்காய வார்டில்

வெவ்வெறு பகுதிகளில் இருவருக்கும் சிகிச்சை அளித்தார்கள். தமிழரசனுக்கு தீக்காயம் அதிகமாக இருந்ததால் அவரை 12ம் வார்டிலும், விஜயகணபதிக்கு தீக்காயம் குறைவாக இருந்ததால் அவருக்கு 13ம் வார்டிலும் சிகிச்சை அளிக்கப்பட்டது. பிறகு சாட்சி வார்டு எண் சரியாக தெரியவில்லை என்று சொன்னார். கே.எம்.சி மருத்துவனையில் என்னையும், விஜயகணபதியையும் 4 – 5 போலீசார் வந்து விசாரித்தார்கள். அவர்கள் எந்த காவல் நிலையத்தை சேர்ந்தவர்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் விசாரித்து கையொப்பம் பெற்றார்களா என்றால் இல்லை.

விஜயகணபதியை அவருடைய அக்காவும், மாமாவும் பார்த்துக்கொண்டார்கள் அதனால் விஜயகணபதியை பற்றி அவரிடம் தான் கேட்கவேண்டும். தமிழரசன் இறக்கும் வரை நானும் தமிழரசனின் பாட்டியும் அவரது தாயரும் கே.எம்.சி மருத்துவமனையில் தான் இருந்தோம். ஆம்புலன்சில் ஏறும் போது தமிழசரன் என்னிடம் கூறிய தகவலை தவிர மற்றபடி எனக்கு சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது தமிழரசன் கூறியது மட்டும் தான் தெரியும்.

போலீஸ் விசாரணையில் நான் காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு சென்ற போது விஜயகணபதிக்கு அவருடைய அக்கா, மாமா வந்தார்கள் என்ற விவரத்தை கூறினேனா என்றால் இல்லை. தனித்தனியாக ஆம்புலன்சில் மேல்சிகிச்கைக்காக அனுப்பிய விவரத்தை போலீஸ் விசாரணையில் கூறினேனா என்றால் அதை பற்றி என்னை கேட்காததால் கூறவில்லை. போலீசார் என்னை கே.எம்.சி மருத்துவனையில் விசாரித்தார்கள். அப்போது இதற்கு முன்னால் கூறிய தகவல்களை எல்லாம் கூறினேனா என்றால் அவைகளை தான் கூறினேன்.

எனக்கு சம்பவத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது என்றும், எனது மைத்துனர் இறந்துவிட்டார் என்ற ஆதங்கத்தில் எதிரிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.11.13 18:31:09 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.